**செய்தி வெளியீடு எண்: 426** **நாள்: 03.07.2018**

**செய்தி வெளியீடு**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் 2.7.2018 அன்று தலைமைச் செயலகத்தில், உயர்கல்வித் துறை சார்பில் சேலம், பெரியார் பல்கலைக்கழகத்தில் 30 கோடியே 74 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள அறிவியல் பிரிவுக் கட்டடம், பொதுக்கணினி மையம், உபகரண மையம், கூடுதல் மகளிர் விடுதி, உணவுக் கூடம், உள்விளையாட்டு அரங்கம் மற்றும் வங்கி கட்டடங்கள் ஆகியவற்றை காணொலிக் காட்சி (Video Conferencing) மூலமாக திறந்து வைத்தார்கள். மேலும், திருநெல்வேலி, திருப்பூர், மதுரை, இராமநாதபுரம், திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை மற்றும் கரூர் ஆகிய மாவட்டங்களில் 14 கோடியே 54 லட்சத்து 30 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள உயர்கல்வித் துறை கட்டடங்களையும் திறந்து வைத்தார்கள்.

தமிழகத்தை அறிவுசார் மற்றும் தொழில்நுட்ப கல்வியில் சிறந்த மாநிலமாக உயர்த்த வேண்டும் என்ற உயரிய நோக்கிலும், கிராமப்புற மாணவ மாணவிகள் உயர்கல்வி கற்று, வாழ்வில் சிறப்பான நிலையை அடைந்திடும் வகையிலும், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் தமிழ்நாடு அரசு, கிராமப்புற மாணாக்கர்கள் உயர்கல்வி கற்பதற்காக நகரங்களை நாடி செல்ல சிரமப்படாமல், அவர்கள் வசிக்கும் இடங்களுக்கு அருகிலேயே உயர்கல்வி கற்பதற்கு ஏதுவாக கடந்த 7 ஆண்டுகளில் தமிழ்நாட்டில் பல்வேறு பகுதிகளில் 56 அரசு / பல்கலைக்கழக உறுப்பு மற்றும் அறிவியல் கல்லூரிகள், 4 அரசு பொறியியல் கல்லூரிகள் மற்றும் 19 பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளை துவக்கியுள்ளதோடு, வேலைவாய்ப்பினை பெறுவதற்கு ஏதுவாக 2018–2019ஆம் கல்வியாண்டில் 264 புதிய பாடப்பிரிவுகளை அறிமுகப்படுத்தி, அரசு கல்லூரிகளுக்கான உட்கட்டமைப்பு வசதிகளையும் மேம்படுத்தியுள்ளது. இதன்மூலம், மொத்த மாணவர் சேர்க்கை விகிதத்தில் தமிழ்நாடு மாநிலம் 46.9 சதவிகிதத்தைப் பெற்று இந்தியாவிலேயே முதல் இடத்தில் உள்ளது.

உயர்கல்வித் துறையின் கீழ் பல்கலைக்கழகங்கள் மற்றும் அரசு கல்லூரிகளின் உட்கட்டமைப்புகளை மேம்படுத்தும் வகையில், சேலம், பெரியார் பல்கலைக்கழகத்தில் 30 கோடியே 74 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள அறிவியல் பிரிவுக் கட்டடம், பொதுக்கணினி மையம், உபகரண மையம்,

மகளிர் விடுதி, உணவுக் கூடம், உள்விளையாட்டு அரங்கம் மற்றும் வங்கி கட்டடங்கள் ஆகியவற்றை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் காணொலிக் காட்சி மூலமாக திறந்து வைத்தார்கள்.

மேலும், திருநெல்வேலி மாவட்டம், அபிசேகபட்டியில் உள்ள மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தில் 2 கோடியே 50 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பேராசிரியர் குடியிருப்புகள்; திருப்பூர் – சிக்கண்ணா அரசு கலைக் கல்லூரியில் 69 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள வகுப்பறைக் கட்டடங்கள்;

மதுரை மாவட்டம், மேலூரில் உள்ள அரசு பலவகை தொழில்நுட்ப கல்லூரியில் 2 கோடியே 12 லட்சத்து 30 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள கூடுதல் கட்டடங்கள்; இராமநாதபுரம் மாவட்டம், திருவாடனையில் உள்ள அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிக்கு 7 கோடியே 25 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள நிர்வாக மற்றும் கல்வியியல் கட்டடம்; திருச்சிராப்பள்ளி மாவட்டம் – திருவெறும்பூர், அரசு கலைக் கல்லூரியில் 69 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள வகுப்பறைக் கட்டடங்கள்; புதுக்கோட்டை – அரசு கலைக் கல்லூரியில் 69 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள வகுப்பறைக் கட்டடங்கள் மற்றும் கரூர் – அரசு கலைக் கல்லூரியில் 60 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள நூலகக் கட்டடம்;

என மொத்தம் 45 கோடியே 28 லட்சத்து 80 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள உயர்கல்வித் துறை கட்டடங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் திறந்து வைத்தார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சர் திரு.கே.பி.அன்பழகன், தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., உயர்கல்வித் துறை முதன்மைச் செயலாளர் திரு.சுனீல் பாலீவால், இ.ஆ.ப., தொழில்நுட்ப கல்வி இயக்குநர் (முழு கூடுதல் பொறுப்பு) திரு.கே. விவேகானந்தன், இ.ஆ.ப., கல்லூரிக் கல்வி இயக்குநர் (முழு கூடுதல் பொறுப்பு) திருமதி பா.சு.சாந்தி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**
**நாள்: 3.7.2018**